21615

AL/2025/22/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ....................................

அறிவுறுத்தல்கள் :

- ❋ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. அவற்றுக்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
- ❋ **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
- ❋ **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ❋ **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
- ❋ **பகுதி I, பகுதி II, பகுதி III** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்படல் வேண்டும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| பகுதி I | 1 - 40 | |
| பகுதி II | 1 | |
| | 2 | |
| பகுதி III | 3 | |
| | 4 | |
| | 5 | |
| | 6 | |
| மொத்தம் | | |

| | குறியீட்டு எண் | கையொப்பம் |
|---|---|---|
| 1 ஆவது பரீட்சகர் | | |
| 2 ஆவது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவுசெய்து, அதற்குரிய **இலக்கத்தினை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

1. இரண்டாம்நிலைத் தரவுகளின் மூன்று மூலங்களாவன
   (1) அளவீடுகள், பத்திரிகைகள் மற்றும் அறிக்கைகள்
   (2) நூலகம், இணையம் மற்றும் அளவீடுகள்
   (3) நூல்கள், அவதானிப்புக்கள் மற்றும் படங்கள்
   (4) நூலகம், இணையம் மற்றும் படங்கள்
   (5) இணையம், நேர்காணல்கள் மற்றும் அறிக்கைகள் (……)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



2. 1:50 000 இடவிளக்கப் படத்தில் 'இடவுயரம்' என்பதனால் குறித்துக் காட்டப்படுவது
   (1) நில அளவீட்டுக்குப் பயன்படுத்தப்படும் தளப் புள்ளியாகும்.
   (2) உயர்ச்சியைக் காட்டும் குறித்த விசேட புள்ளியாகும்.
   (3) நிரந்தரமான அளவீட்டுப் புள்ளியாகும்.
   (4) அதி உயர்ச்சிப் புள்ளியாகும்.
   (5) தாழ்வான உயர்ச்சிப் புள்ளியாகும். (......)

3. புவியியல் தகவல் முறைமையின் (GIS) தரவுப் படை என்பது
   (1) ஒரு காப்புத் தரவுக் கோப்பாகும்.
   (2) வடிவங்களை வரைவதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகும்.
   (3) புவியியல் அம்சத்துடன் தொடர்புடைய ஒரு தரவுத் தொகுதியாகும்.
   (4) தரவினை முன்வைக்கும் ஒரு தொழில்நுட்ப முறையாகும்.
   (5) இறுதிப் படத்தின் ஒரு வெளியீடாகும். (......)

4. புவியியல் தகவல் முறைமையின் (GIS) இரண்டு வெளியீட்டுச் சாதனங்கள் எவை?
   (1) வருடி மற்றும் அச்சுப்பொறி (2) காட்சித்திரை மற்றும் அச்சுப்பொறி
   (3) விசைப்பலகை மற்றும் காட்சித்திரை (4) இலக்கமாக்கும் கருவி மற்றும் வருடி
   (5) சுட்டி மற்றும் விசைப்பலகை (......)

5. தரவுப் பகுப்பாய்வில் பயன்படுத்தப்படும் இரண்டு பிரிக்கை அளவீடுகளை உள்ளடக்கும் தெரிவு யாது?
   (1) நியம விலகல் மற்றும் ஆகாரம் (2) வீச்சு மற்றும் இடைக்காலணை வீச்சு
   (3) இடையம் மற்றும் ஆகாரம் (4) வீச்சு மற்றும் இடை
   (5) இடை மற்றும் மாறற்றிறன் (......)

6. தொலையுணர்வு மூலமான தரவு சேகரிப்புக்கு வான்வழி மேடைகளில் மாத்திரம் பயன்படுத்தப்படும் வாகனங்களின் வகைகளை எடுத்துக் காட்டும் தெரிவு யாது?
   (1) உலங்குவானூர்தி, பலூன் மற்றும் செய்மதி
   (2) உந்துகணை, விண்வெளி ஓடம் மற்றும் உலங்குவானூர்தி
   (3) செய்மதி, உந்துகணை மற்றும் விமானம்
   (4) விமானம், உலங்குவானூர்தி மற்றும் பலூன்
   (5) பலூன், உலங்குவானூர்தி மற்றும் பாரந்தூக்கி (......)

7. தரவுத் தொகுதியொன்றின் தரவு வரிசை என்பது, தரவுத் தொகுதியை
   (1) ஏறுவரிசை அல்லது இறங்குவரிசையில் தயார்படுத்தலாகும்.
   (2) வரிசைகள் அல்லது நிரல்களாக ஒழுங்குபடுத்தலாகும்.
   (3) வரைபாக முன்வைப்பதற்குத் தயார்படுத்தலாகும்.
   (4) பிரிவுகள் அல்லது வகைகளாகப் பிரித்தலாகும்.
   (5) எவ்வித ஒழுங்குமின்றி தயார்படுத்தலாகும். (......)

8. பாய்ச்சல் படம் ஒன்றினால் எடுத்துக்காட்டுவதற்கு மிகப்பொருத்தமான தரவு
   (1) மழைவீழ்ச்சிப் பரம்பல் (2) மக்களின் இடப்பெயர்வு
   (3) நகரங்களின் குடித்தொகை (4) குடித்தொகை வளர்ச்சி
   (5) நெல் உற்பத்தி (......)

9. பின்வருவனவற்றுள் பண்புசார் தரவுகளுக்கு உதாரணமாகக் காணப்படுவது எது?
   (1) மாவட்டமொன்றில் ஏற்படும் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை
   (2) குறிப்பிட்ட நகரமொன்றின் நாளாந்த வெப்பநிலை
   (3) காலநிலை மாற்றத்தின் தாக்கம் பற்றிய கருத்துக்கள்
   (4) புவியியலில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகள்
   (5) கொழும்பு நகரின் மொத்த சனத்தொகை (......)

10. 1: 50 000 இடவிளக்கப் படத்தில் முறிவுக்கோட்டுக் குறியீடுகளினால் முறையே சிவப்பு, கபில மற்றும் கறுப்பு நிறங்களில் எடுத்துக்காட்டப்படும் மூன்று அம்சங்களும் யாவை?
   (1) நகரசபை எல்லை, உப சமவுயரக்கோடு மற்றும் நடை பாதை
   (2) வண்டிப் பாதை, கிராம சேவகர் பிரிவு எல்லை மற்றும் நடை பாதை
   (3) நடை பாதை, மாநகரசபை எல்லை மற்றும் உப சமவுயரக்கோடு
   (4) கிராமசேவகர் பிரிவு எல்லை, மாநகரசபை எல்லை மற்றும் ஜீப் வண்டிப் பாதை
   (5) உப சமவுயரக்கோடு, வண்டிப் பாதை மற்றும் உள்ளூர் அதிகாரசபை எல்லை (......)


[பக். 3 ஐப் பார்க்க

**11.** புவிமேற்பரப்பிலிருந்து ஆரம்பிக்கும் வளிமண்டலத்தின் நான்கு பிரதான படைகளை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) வெப்ப மண்டலம், இடை மண்டலம், படை மண்டலம் மற்றும் மாறன் மண்டலம்
(2) படை மண்டலம், மாறன் மண்டலம், இடை மண்டலம் மற்றும் வெப்ப மண்டலம்
(3) இடை மண்டலம், வெப்ப மண்டலம், படை மண்டலம் மற்றும் மாறன் மண்டலம்
(4) மாறன் மண்டலம், படை மண்டலம், இடை மண்டலம் மற்றும் வெப்ப மண்டலம்
(5) மாறன் மண்டலம், இடை மண்டலம், வெப்ப மண்டலம் மற்றும் படை மண்டலம் (......)

**12.** புவி ஓட்டிலிருந்து மையம் வரை காணப்படும் மூன்று தொடர்ச்சியின்மைகளை முறையே எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) மோகோறோவிசிக், கொன்ராட் மற்றும் கூற்றன்பேர்க்
(2) கொன்ராட், மோகோறோவிசிக் மற்றும் கூற்றன்பேர்க்
(3) கொன்ராட், கூற்றன்பேர்க் மற்றும் மோகோறோவிசிக்
(4) கூற்றன்பேர்க், கொன்ராட் மற்றும் மோகோறோவிசிக்
(5) மோகோறோவிசிக், கூற்றன்பேர்க் மற்றும் கொன்ராட் (......)

**13.** உலகில் இடம்பெற்ற புவிநடுக்கங்களின் பெரும்பான்மையான மேன்மையங்கள் அமைந்திருப்பது
(1) அந்தாட்டிக் பிரதேசத்திலாகும்.
(2) இமயமலைப் பிரதேசத்திலாகும்.
(3) பசிபிக் சமுத்திரத்திலாகும்.
(4) ஆபிரிக்கப் பிளவுப் பள்ளத்தாக்கிலாகும்.
(5) மத்திய அத்திலாந்திக் சமுத்திரத்திலாகும். (......)

**14.** அருகிலுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு காற்றின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் நிலவுருவம் யாது?



(1) இயாடாங்கு (2) தளத்திடைக் குன்றுகள்
(3) பீடக்கிடைத்திணிவு (4) தனியோங்கல்
(5) மேசா (......)

**15.** ‘வாடி’ என்பது யாது?
(1) மழைப் பருவகாலம் அல்லாத ஏனைய காலங்களில் வரட்சியாகக் காணப்படும் ஆற்றுப் படுக்கையாகும்.
(2) பனிக்கட்டியாற்றின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும் நிலவுருவம்.
(3) வரண்ட பிரதேசங்களில் காணப்படும் நிரந்தரமான ஆறாகும்.
(4) பாலைவனப் பகுதிகளில் உள்ள தரைக்கீழ் நீரூற்றாகும்.
(5) பாலைவனப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படும் மலையிடைவெளியாகும். (......)

**16.** வளிமண்டலத்தில் ஓர் அலகு வளியில் அடங்கியுள்ள நீராவியின் அளவு என்பது
(1) தனியீரப்பதன் ஆகும். (2) சாரீரப்பதன் ஆகும். (3) தன்னீரப்பதன் ஆகும்.
(4) சாதாரண ஈரப்பதன் ஆகும். (5) தாழ் ஈரப்பதன் ஆகும். (......)

**17.** கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டிற்கமைய அயன ஈரக் காலநிலை, அயன மொன்சூன் காலநிலை, அயன ஈர மற்றும் வரண்ட காலநிலை ஆகியவற்றுக்கு முறையே பயன்படுத்தப்படும் குறியீட்டு எழுத்துக்கள் யாவை?
(1) Aw, Am, Af (2) Af, Aw, Am (3) Af, Am, Aw
(4) Am, Af, Aw (5) Aw, Af, Am (......)

**18.** ஐக்கிய நாடுகளின் சூழலியல் நிகழ்ச்சித்திட்டத்தினால் (UNEP) ஒவ்வொரு வருடமும் உலக சூழலியல் தினமாகப் பெயரிடப்பட்டுள்ள திகதி
(1) மார்ச் 21. (2) ஏப்ரல் 22. (3) யூன் 5. (4) ஒக்டோபர் 16. (5) டிசம்பர் 1. (......)

**19.** பின்வருவனவற்றுள் புவியின் நன்னீரில் பெருமளவு சதவீதத்தைக் கொண்டிருப்பது எது?
(1) ஆறுகள்
(2) ஏரிகள்
(3) பனியாறுகளும் பனிக்கட்டிக் கவிப்புக்களும்
(4) தரைநீர்
(5) வளிமண்டலம் (......)

**20.** வருடம் முழுவதும் $20^0C$ மற்றும் $25^0C$ இற்கு இடையில் சீரான வெப்பநிலையைக் கொண்டிருந்தாலும், சிலவேளைகளில் $43^0C$ இல் இருந்து $49^0C$ ஆக எழுச்சியடையும் உயிர்த்திணிவு வகை யாது?
(1) அயன மழைக்காடு (2) தைக்கா காடு (3) துந்திரா
(4) பாலைவனங்கள் (5) இடைவெப்ப வலயக்காடு (......)

[பக். 4 ஐப் பார்க்க

**21.** இயற்கை இடர் மற்றும் அனர்த்தமொன்றினை முறையே எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) எரிமலை வெடிப்பு, புவிநடுக்கம்
(2) காலநிலை மாற்றம், எரிமலை வெடிப்பு
(3) வரட்சி, பயிரழிவுகள்
(4) வெள்ளப்பெருக்குகள், கடல்மட்ட உயர்வு
(5) நிலச்சரிவு, வெள்ளப்பெருக்குகள் (……)

**22.** 'பாகியோ' என்றால் என்ன?
(1) தென் பிலிப்பைன்சில் காணப்படும் ஒரு சூறாவளியாகும்.
(2) இந்து சமுத்திரத்திலுள்ள ஒரு சூறாவளியாகும்.
(3) பசிபிக் பிரதேசத்திலுள்ள ஒரு காற்றுப் பாங்காகும்.
(4) தாய்லாந்தின் ஒரு கிராமிய விழாவாகும்.
(5) இந்தோனேசியாவிலுள்ள ஓர் எரிமலையாகும். (……)

**23.** பின்வருவனவற்றுள் இலங்கையில் அண்மையில் குறைந்தளவான உப்பு உற்பத்தியில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்திய காரணி எது?
(1) குறைந்தளவான ஈரப்பதன்
(2) காற்றின் பாங்கில் ஏற்பட்ட மாற்றம்
(3) கடுமையான மழைவீழ்ச்சி
(4) வளி மாசடைதலில் ஏற்பட்ட அதிகரிப்பு
(5) நீண்டகால வரட்சி (……)

**24.** தென் ஆசிய ஒத்துழைப்பிற்கான சூழலியல் நிகழ்ச்சித்திட்டத்தினால் (SACEP) 'சூழலியல் முறைமைகள் மற்றும் சமூகக் காடு' என்ற விடயப் பகுதி எந்த நாட்டுக்கு ஒதுக்கப்பட்டது?
(1) இந்தியா (2) பங்களாதேஷ் (3) பூட்டான் (4) இலங்கை (5) பாகிஸ்தான் (……)

**25.** இலங்கையின் மத்திய சூழல் அதிகாரசபை (CEA) என்பது
(1) பாதுகாக்கப்பட்ட இயற்கை வாழிடங்களில் ஒழுங்குவிதிகளை அமுலாக்கும் நிறுவனமாகும்.
(2) நிலைபேண் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான அரச சார்பற்ற நிறுவனமாகும்.
(3) சூழலியல் தாக்க மதிப்பீட்டினை (EIA) மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனமாகும்.
(4) சூழலியல் சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுலாக்கும் அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தல் நிறுவகமாகும்.
(5) கரையோரப் பாதுகாப்பிற்குப் பொறுப்பான சுற்றாடல் அமைச்சின் ஓர் அதிகார சபையாகும். (……)

**26.** மூன்று மானிட நிலத்தோற்றங்களைச் சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) உட்கட்டுமானம், நகரமயமாக்கம் மற்றும் கைத்தொழில்மயமாக்கம்
(2) உட்கட்டுமானம், நகரமயமாக்கம் மற்றும் வெள்ளச்சமவெளி
(3) விவசாயம், ஆற்று வடிநிலம் மற்றும் போக்குவரத்து
(4) நகரமயமாக்கம், குடியிருப்புக்கள் மற்றும் மலைத் தொகுதிகள்
(5) போக்குவரத்து, கைத்தொழில்மயமாக்கம் மற்றும் வடிகால் தொகுதி (……)

**27.** 2012 குடித்தொகைக் கணிப்பீட்டின்படி கொழும்பைத் தவிர இலங்கையின் மிக உயர்ந்த குடித்தொகையைக் கொண்டிருக்கும் மூன்று மாவட்டங்களை முறையே கொண்ட தெரிவு யாது?
(1) குருநாகல், காலி மற்றும் மாத்தறை
(2) கண்டி, கம்பஹா மற்றும் களுத்துறை
(3) கண்டி, குருநாகல் மற்றும் காலி
(4) கம்பஹா, களுத்துறை மற்றும் இரத்தினபுரி
(5) கம்பஹா, குருநாகல் மற்றும் கண்டி (……)

**28.** இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலத்தில் பரும்படியான பிறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பொறுப்பான இரண்டு காரணிகளை உள்ளடக்கிய தெரிவு யாது?
(1) அதிகரித்த பிறப்புக்கள் மற்றும் கருத்தடை முறைகளின் அதிகரித்த பயன்பாடு
(2) திருமணத்தினைப் பிற்போடுதல் மற்றும் உள் இடப்பெயர்வு அதிகரிப்பு
(3) வெளி இடப்பெயர்வு அதிகரிப்பு மற்றும் சுகாதார சேவைகளின் வளர்ச்சி
(4) கருத்தடை முறைகளின் அதிகரித்த பயன்பாடு மற்றும் உயர்கல்வியில் அதிகளவான பெண்களின் நாட்டம்
(5) திருமணங்களின் அதிகரிப்பு மற்றும் கருத்தடை முறைகளின் அதிகரித்த பயன்பாடு (……)

**29.** உலகின் கிராமியக் குடியிருப்புக்களில் உள்ள மக்கள் ஈடுபடும் மூன்று முதனிலைப் பொருளாதார நடவடிக்கைகளாவன
(1) விலங்கு வளர்ப்பு, நிரந்தரப் பயிர்ச்செய்கை மற்றும் வர்த்தகம்
(2) வர்த்தகம், மீன்பிடி மற்றும் பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை
(3) மீன்பிடி, விலங்கு வளர்ப்பு மற்றும் விவசாயம்
(4) விலங்கு வளர்ப்பு, புடவை உற்பத்தி மற்றும் காட்டியல்
(5) காட்டியல், பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை மற்றும் புடவை உற்பத்தி (……)

**30.** இலங்கையில் கிராமிய - நகரக் (Rurban) குடியிருப்புக்கள் பெரும்பாலும் அமைந்து காணப்படுவது.
(1) ஈரவலய நகரக் குடியிருப்புக்களைச் சூழ்ந்தாகும்.
(2) வரண்ட வலயக் குளக் குடியிருப்புக்களைச் சூழ்ந்தாகும்.
(3) வரண்ட வலய நகரக் குடியிருப்புக்களைச் சூழ்ந்தாகும்.
(4) மகாவலிக் குடியிருப்புக்களைச் சூழந்தாகும்.
(5) பிரதான நகரக் குடியிருப்புக்களைச் சூழ்ந்தாகும். (……)

[பக். 5 ஐப் பார்க்க

Past Papers Wiki

**31.** உலக நகரமயமாக்கத்தின் குறிப்பிடத்தக்க பண்பாகக் காணப்படுவது
(1) நகரப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்கான இடப்பெயர்வு.
(2) நகரப் பகுதிகளிலிருந்து கிராமியப் பகுதிகளுக்கான இடப்பெயர்வு.
(3) கிராமியப் பகுதிகளிலிருந்து நகரப் பகுதிகளுக்கான இடப்பெயர்வு.
(4) முன் எப்பொழுதுமில்லாதவாறு நகரங்களில் குறைந்த மக்கள் வாழ்தல்.
(5) இயற்கை அதிகரிப்பினால் மாத்திரம் குடித்தொகை வளர்ச்சியடைதல் (……)

**32.** பின்வருவனவற்றுள் உலக நகரமயமாக்கத்தின் நேரடியான சூழலியல் பிரச்சினையை எடுத்துக்காட்டும் தெரிவு எது?
(1) நகர இடநெருக்கடி (2) திண்மக் கழிவு வெளியேற்றம் (3) நகர வறுமை
(4) நகரக் குற்றங்கள் (5) சமூக தனிமைப்படுத்தல் (……)

**33.** இலங்கையில் நகர மையங்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோல்
(1) நிர்வாக எல்லைகள் (2) குடித்தொகைப் பருமன்
(3) குடித்தொகை அடர்த்தி (4) நகரத் தொழிற்பாடுகளின் எண்ணிக்கை
(5) விவசாயம் அல்லாத துறையின் தொழிலாளர் விகிதம் (……)

**34.** இலங்கையின் நகரமயமாக்கச் செயன்முறையின் முனைப்பான அம்சத்தைக் கொண்ட தெரிவு யாது?
(1) மேல் மாகாணத்தில் மாத்திரம் இடம்பெறும் நகர விரிவாக்கம்
(2) சில கிராமப் பகுதிகள் நகரப் பகுதிகளாக மீளவும் வகைப்படுத்தப்படல்
(3) காலநிலை மாற்றத்தின் காரணமாக நகர மையங்களில் நிகழும் குழப்பநிலை
(4) பூகோள மட்டத்துடன் ஒப்பிடுமிடத்து நகரமயமாக்கம் மிக உயர்வு
(5) மலைநாட்டில் நகரக் குடித்தொகையின் அதிகளவான செறிவு (……)

**35.** அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் விவசாயத்தின் பொதுவான பண்பைக் கொண்ட தெரிவு யாது?
(1) சேதன விவசாயத்தில் முழுமையாகத் தங்கியிருத்தல்
(2) கடுமையான போட்டியும் சிறப்புத் தேர்ச்சியும்
(3) நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச வர்த்தகம்
(4) இயந்திர மயமாக்கத்தில் பெரிதும் தங்கியிருத்தல்
(5) சிறிய அளவிலான வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை (……)

**36.** உலகப் பெற்றோலிய வர்த்தகத்தின் முனைப்பான அம்சத்தினைக் குறிக்கும் தெரிவு யாது?
(1) கடல் மூலமாக மட்டுமே கொண்டு செல்லப்படுகின்றது.
(2) பூகோளரீதியாக சந்தைப்படுத்தப்படும் ஒரு பொருளாகும்.
(3) மத்திய கிழக்கு நாடுகள் மட்டுமே உற்பத்தி செய்கின்றன.
(4) தற்பொழுது சந்தைப்படுத்தல் குறைந்தளவான கவனத்தைக் கொண்டுள்ளது.
(5) பூகோள மட்டத்தில் விலைகள் பெருமளவு உறுதியாகக் காணப்படுகின்றன. (……)

**37.** இலங்கையில் மணல் அகழ்தலுடன் தொடர்புடைய பிரதான சூழலியல் பிரச்சினை
(1) மண்ணின் இரசாயனச் சேர்க்கை மாற்றமடைதல்
(2) தரைநீர் மட்டத்தில் அதிகரிப்பு ஏற்படல்
(3) பரந்தளவில் நிலத்தின் தரமிழப்பு ஏற்படல்
(4) காலநிலை மாற்றத்தில் ஏற்படும் நேரடியான தாக்கம்
(5) விரிவடைந்துவரும் வளி மாசடைதல் (……)

**38.** இலங்கையின் மேல் மாகாணத்தில் ஆடைக் கைத்தொழில்கள் அமையப் பெறுவதற்குப் பங்களித்த பிரதான காரணி
(1) குறைந்தளவான சமூகப் பிரச்சினைகள் (2) தேர்ச்சிபெற்ற தொழிலாளர் கிடைப்பனவு
(3) குறைந்தளவான வாழ்க்கைச் செலவு (4) மலிவான மூலப்பொருட்கள்
(5) மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் (……)

**39.** பூகோளமயமாக்கச் செயன்முறை என்பது சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) இனங்காணப்பட்ட எந்த இரண்டு பிரதான புலங்களினூடாக இடம்பெறுகிறது?
(1) வர்த்தகப் பரிமாற்றங்கள் மற்றும் அறிவின் பரவலாக்கம்
(2) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலதன முதலீடுகள்
(3) இடப்பெயர்வு மற்றும் போக்குவரத்துச் சேவைகள்
(4) அறிவின் பரவலாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்
(5) வர்த்தகப் பரிமாற்றங்கள் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் (……)

**40.** பின்வரும் தெரிவுகளுள் எது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பூகோளமயமாக்கத்தினால் ஏற்படும் பாதகமான பொருளாதாரத் தாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது?
(1) வர்த்தகம் மற்றும் முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு
(2) உள்ளூர் கைத்தொழில்கள் மற்றும் மூலதனத்தில் வீழ்ச்சி
(3) உயர்வான வினைத்திறனை ஏற்படுத்தும் போட்டித் தன்மை
(4) சர்வதேச நிதிச் சந்தைக்கான அடைகை
(5) விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி (……)

PAST PAPERS WIKI

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 2

භූගෝල විද්‍යාව I / புவியியல் I / Geography I

II කොටස / பகுதி II / PART II

22 STE I

විභාග අංකය / சுட்டெண் / Index No ..............................




සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | | | |
|---|---|---|---|
| භූගෝල විද්‍යාව I<br>புவியியல் I<br>**Geography I** | III කොටස<br>பகுதி III<br>**PART III** | | **22 STE I** |

ප්‍රශ්න අංකය
வினா இல.
Question No. **6**




PAST PAPERS WIKI




SCALE 1 : 50 000

සමෝච්ච රේඛා අන්තරය අඩි 100
சமவுயரக்கோட்டு இடைவெளி 100 அடி
Contour Interval 100 feet

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
※ பகுதி **III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
※ இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப் படமும் இலங்கையின் மாவட்டப் படமும் வரைபுத்தாள்கள் இரண்டும் வழங்கப்படும்.

## பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த மொனராகலை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகள் 100 அடி இடைவெளியில் காட்டப்பட்டுள்ளன. இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு :
※ விடைத்தாளில் தொடர்புடைய **வினா இலக்கத்தினையும்** அதன் உப பிரிவுகளின் **இலக்கங்களையும்** தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
※ **இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
※ தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தினை உமது விடைத்தாளுடன் இணைக்க **வேண்டாம்.**

(i) படப் பகுதியில் Ⓐ இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இடத்தின் நிலவுருவத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(ii) படப் பகுதியில் தென்மேற்கு எல்லைக்கும் வடக்கு எல்லைக்கும் இடையில் விரிவடைந்து காணப்படும் பிரதான வீதியின் (A4) நீளத்தினைக் கிலோமீற்றரில் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) Ⓑ - Ⓒ, Ⓓ - Ⓔ மற்றும் Ⓕ - Ⓖ ஆகிய கோடுகளினால் காட்டப்பட்டுள்ள **மூன்று** நிலவுருவங்களையும் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) படப் பகுதியில் காணப்படும் குடியிருப்புகளின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) நாற்பக்கல் Ⓗ இல் காணப்படும் அரச நிறுவகங்கள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(vi) படப் பகுதியில் Ⓙ - Ⓚ இனால் குறித்துக்காட்டப்பட்டுள்ள கோடு வழியே குறுக்கு வெட்டுமுகம் ஒன்றினை வரைந்து, அதன் உயர்ச்சிப் பாங்கினை விவரிக்குக. (அதற்காகத் தரப்பட்டுள்ள வரைபுத் தாளைப் பயன்படுத்தவும்.) (04 புள்ளிகள்)

(vii) நாற்பக்கல் Ⓛ இல் காணப்படும் ஏதாவது **மூன்று** வகையான நிலப்பயன்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றின் பரம்பல் பாங்கினைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(மொத்தம் = 20 புள்ளிகள்)

**2.** தரப்பட்டுள்ள உலகப் படத்தில், நியமக் குறியீடுகளையும் நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் **குறித்துப் பெயரிடுக.**

- அலாஸ்கா
- பெங்குவாலா நீரோட்டம்
- பியூஜியாமா எரிமலை
- வட கடல்
- கார்பென்ரேரியா குடா
- பற்றகோணியா பாலைவனம்
- அற்லஸ் மலைத்தொடர்
- இந்து நதி
- 2024 இல் ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் பற்றிய மாநாடு (UNCCC) இடம்பெற்ற நகரம்
- 2024 இல் உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி உலகின் மகிழ்ச்சிகரமான நாடு (10 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

Past Papers Wiki



## பகுதி III

3. (i) 'வினாக்கொத்து' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) சிறந்த வினாக்கொத்து ஒன்றினைத் தயாரிக்கும் போது பயனுடையது எனக் கருதப்படும் **மூன்று** அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iii) வினாக்கொத்து அளவீடு ஒன்றில் பயன்படுத்தப்படும் நேர்காணல் முறையின் **இரண்டு** அனுகூலங்களை ஆராய்க. (04 புள்ளிகள்)

(iv) வினாக்கொத்து மூலமான அளவீடு ஒன்றுக்காக (a) வினாக்கொத்தினைத் தபாலில் அனுப்புதல், (b) பதிலிறுப்பவருடன் தொலைபேசி மூலமாக உரையாடுதல் ஆகிய தரவு மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான முறைகளின் **இரண்டு** பிரதிகூலங்கள் வீதம் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

4. (i) 'நவீன படவரைகலையியல்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) நவீன படவரைகலையியல் தொழில்நுட்பத்தின் பொதுவான பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

(iii) நவீன படவரைகலையியல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திப் படங்களைத் தயாரிப்பதற்குக் கிடைக்கக்கூடிய தரவு மூலங்கள் **இரண்டினை** விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) அனர்த்த முகாமைத்துவத்தில் பிரயோகிக்கக்கூடிய நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளின் **மூன்று** பயன்பாடுகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

5. **அட்டவணை 01** இல் 2013/14 ஆகிய ஆண்டுகளில் இலங்கையின் மாவட்டரீதியிலான கைத்தொழில்களின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. இத் தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 01 : இலங்கையில் மாவட்டரீதியில் கைத்தொழில்களின் எண்ணிக்கை - 2013/14**

| மாவட்டம் | கைத்தொழில்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 28,648 |
| கம்பஹா | 32,651 |
| களுத்துறை | 15,154 |
| கண்டி | 15,455 |
| மாத்தளை | 7,653 |
| நுவரெலியா | 4,059 |
| காலி | 11,745 |
| மாத்தறை | 13,256 |
| அம்பாந்தோட்டை | 11,647 |
| யாழ்ப்பாணம் | 7,887 |
| மன்னார் | 829 |
| முல்லைத்தீவு | 921 |
| வவுனியா | 1722 |

| மாவட்டம் | கைத்தொழில்களின் எண்ணிக்கை |
|---|---|
| கிளிநொச்சி | 1,136 |
| மட்டக்களப்பு | 9,009 |
| அம்பாறை | 7,057 |
| திருகோணமலை | 3,064 |
| குருநாகல் | 24,544 |
| புத்தளம் | 12,866 |
| அனுராதபுரம் | 11,048 |
| பொலனறுவை | 6,178 |
| பதுளை | 6,138 |
| மொனராகலை | 5,275 |
| இரத்தினபுரி | 11,216 |
| கேகாலை | 8,772 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் 2013/2014*

(i) **அட்டவணை 01** இல் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி *(a)* மீடிறன், *(b)* திரட்டு மீடிறன் மற்றும் *(c)* சதவீத திரட்டு மீடிறன் ஆகியவற்றினைக் கணிப்பிட்டு, **அட்டவணை 02** இனைப் பூர்த்தி செய்க. இதற்காக கீழே தரப்பட்டுள்ள **அட்டவணை 02** இனை உமது விடைத்தாளில் பிரதி செய்துகொள்க. (03 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

[பக். 8 ஐப் பார்க்க

அட்டவணை 02 : மீடிறன் அட்டவணை

| வகுப்பாயிடை | மீடிறன் (*a*) | திரட்டு மீடிறன் (*b*) | சதவீத திரட்டு மீடிறன் (*c*) |
|---|---|---|---|
| 1 - 5000 | | | |
| 5,001 - 10,000 | | | |
| 10,001 - 15,000 | | | |
| 15,001 - 20,000 | | | |
| 20,001 - 25,000 | | | |
| 25,001 - 30,000 | | | |
| 30,001 - 35,000 | | | |

(ii) மேலே (i) இல் உம்மால் பூர்த்திசெய்யப்பட்ட **அட்டவணை 02** இல் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி ஒகிவ் வளையி ஒன்றினை வரைக.
(அதற்காக தரப்பட்டுள்ள வரைபுத் தாளினைப் பயன்படுத்துக.) (05 புள்ளிகள்)

(iii) வரைபாக முன்வைக்கத்தக்க ஒகிவ் வளையின் அனுகூலங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) இலங்கையில் கைத்தொழில்களின் புவியியல் பரம்பலில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக ஆராய்க. (03 புள்ளிகள்)

**6.** 2024 இல் இலங்கையின் குடித்தொகை **அட்டவணை 03** இல் காட்டப்பட்டுள்ளது. அத் தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**அட்டவணை 03 : மாவட்டரீதியில் இலங்கையின் குடித்தொகை - 2024 (ஆயிரத்தில்)**

| இல. | மாவட்டம் | குடித்தொகை (`000) |
|---|---|---|
| 1 | கொழும்பு | 2,374 |
| 2 | கம்பஹா | 2,433 |
| 3 | களுத்துறை | 1,306 |
| 4 | காலி | 1,097 |
| 5 | மாத்தறை | 838 |
| 6 | அம்பாந்தோட்டை | 671 |
| 7 | பதுளை | 872 |
| 8 | மொனராகலை | 527 |
| 9 | கண்டி | 1,461 |
| 10 | மாத்தளை | 527 |
| 11 | நுவரெலியா | 725 |
| 12 | கேகாலை | 869 |
| 13 | இரத்தினபுரி | 1,145 |

| இல. | மாவட்டம் | குடித்தொகை (`000) |
|---|---|---|
| 14 | குருநாகல் | 1,761 |
| 15 | புத்தளம் | 818 |
| 16 | அனுராதபுரம் | 960 |
| 17 | பொலனறுவை | 447 |
| 18 | அம்பாறை | 744 |
| 19 | மட்டக்களப்பு | 595 |
| 20 | திருகோணமலை | 442 |
| 21 | யாழ்ப்பாணம் | 594 |
| 22 | கிளிநொச்சி | 136 |
| 23 | மன்னார் | 124 |
| 24 | முல்லைத்தீவு | 123 |
| 25 | வவுனியா | 172 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம், 2024*

(i) **அட்டவணை 03** இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் ஆயிடைகளுக்கமைய மாவட்டங்களை வகைப்படுத்துக. 1-500, 501-1000 , 1001 -1500, 1501-2000, 2001-2500. (02 புள்ளிகள்)

(ii) உம்மால் மேலே (i) இல் தயாரிக்கப்பட்ட வகைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இடகணியப் படமொன்றினை அமைக்குக.
(இதற்காக தரப்பட்டுள்ள இலங்கை மாவட்டப் படத்தினைப் பயன்படுத்துக.) (08 புள்ளிகள்)

(iii) உம்மால் வரையப்பட்ட படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கையின் குடித்தொகைப் பரம்பலில் காணப்படும் **மூன்று** முனைப்பான அம்சங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

(iv) இடகணியப் படத்தின் **இரண்டு** நன்மைகளைச் சுருக்கமாக ஆராய்க. (02 புள்ளிகள்)

※※※

21615



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

22 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

அறிவுறுத்தல்கள் :

※ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) இலங்கையின் **நான்கு** பிரதான பாறைத் தொகுதிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)


(ii) மேலே (i) இல் உம்மால் பெயரிடப்பட்ட பாறைத் தொகுதிகளுள் ஏதாவது ஒன்றின் **மூன்று** அம்சங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் காணப்படும் உலோகமல்லாத **மூன்று** வகைக் கனியங்களின் புவியியல் பரம்பல் மற்றும் பயன்பாடுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் உலோகமல்லாத கனியங்களின் அகழ்வினால் ஏற்படும் **மூன்று** பிரதான பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

**2.** (i) 'எரிமலையாக்கம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் உரு 01 இல் A, B, C, D, E, F எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள **ஆறு** தலையீட்டு எரிமலை நிலவுருவங்களைச் சரியாகப் பெயரிடுக. (06 புள்ளிகள்)




உரு 01

(iii) தள்ளல் எரிமலை நிலவுருவங்கள் **மூன்றினைப்** புனையா வரைபடங்களைப் பயன்படுத்திச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) எரிமலை வெடிப்பினால் மானிடச் சூழலுக்கு ஏற்படும் **மூன்று** தாக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) 'காலநிலை மாற்றம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) பூகோளக் காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கைக் காரணிகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) காலநிலை மாற்றத்தினால் விவசாயத்தின் மீது ஏற்படும் **மூன்று** தாக்கங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) உலகில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கத்தினை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

4. (i) 'சூழலியல் பாதுகாப்பு' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
(ii) பின்வரும் தலைப்புக்களில் இலங்கையின் காட்டுச் சூழலியல் தொகுதிகளின் **மூன்று** வகைகளைச் சுருக்கமாக விவரிக்குக.
(a) புவியியல் பரம்பல்
(b) காலநிலை (06 புள்ளிகள்)
(iii) இலங்கையில் காட்டுச் சூழலியல் தொகுதிகளின் பாதுகாப்புடன் தொடர்புடைய **மூன்று** பிரதான பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
(iv) இலங்கையில் காடுகளைப் பேணிப் பாதுகாப்பதற்குப் பயனுள்ள சமூகப் பங்கேற்பு உபாயங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II - மானிடப் புவியியல்

5. **அட்டவணை 01** இல் 2001, 2023 ஆகிய ஆண்டுகளுக்குரிய உலகின் பிரதான பிரதேசங்களுக்கான குடித்தொகைப் பரம்பலும் 2035, 2050 ஆகிய ஆண்டுகளுக்குரிய எதிர்வுகூறப்பட்ட குடித்தொகையும் காட்டப்பட்டுள்ளன. அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 01 : 2001, 2023, 2035, 2050 ஆகிய ஆண்டுகளுக்குரிய பிரதான பிரதேசங்களின்படி உலகின் குடித்தொகைப் பரம்பல்**

| பிரதேசம் | 2001 | | 2023 | | 2035 | | 2050 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | குடித்தொகை (மில்லியன்) | % | குடித்தொகை (மில்லியன்) | % | குடித்தொகை (மில்லியன்) | % | குடித்தொகை (மில்லியன்) | % |
| ஆசியா | 3,720 | 60.6 | 4,739 | 59.2 | 5,054 | 57.4 | 5,253 | 54.7 |
| ஆபிரிக்கா | 818 | 13.3 | 1,453 | 18.1 | 1,865 | 21.1 | 2,417 | 25.3 |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 525 | 8.6 | 652 | 8.1 | 701 | 8.0 | 727 | 7.6 |
| ஐரோப்பா | 727 | 11.9 | 744 | 9.3 | 746 | 8.4 | 733 | 7.6 |
| வட அமெரிக்கா | 316 | 5.1 | 375 | 4.7 | 394 | 4.5 | 405 | 4.2 |
| ஓசானியா | 31 | 0.5 | 45 | 0.6 | 53 | 0.6 | 61 | 0.6 |
| உலகம் | 6,137 | 100.0 | 8,008 | 100.0 | 8,813 | 100.0 | 9,596 | 100.0 |

Source : *Population Refenence Bureau (PRB)*

(i) பிரதேசமொன்றின் குடித்தொகைப் பரம்பல் ஏன் முக்கியமானதொரு அம்சமாகக் கருதப்படுகின்றது? (02 புள்ளிகள்)
(ii) 2001 - 2023 காலத்தில் உலகின் பிரதான பிரதேசங்களின்படி குடித்தொகைப் பரம்பலில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)
(iii) 2023 இல் இருந்து 2050 வரை உலகின் பிரதான பிரதேசங்களின் குடித்தொகைப் பரம்பலில் காணப்படும் **மூன்று** போக்குகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
(iv) உலகின் மிகக் கூடிய குடித்தொகைச் செறிவு கொண்ட பிரதேசத்தினால் எதிர்நோக்கப்படும் **மூன்று** பிரச்சினைகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

6. (i) 'நகரமயமாக்கம்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
(ii) நாடொன்றின் நகரமயமாக்கத்தில் ஏற்படும் அதிகரிப்பினைத் தீர்மானிக்கும் **மூன்று** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)
(iii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினால் எதிர்நோக்கப்படும் **மூன்று** நகரமயமாக்கப் பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)
(iv) இலங்கையில் நகரமயமாக்கம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Past Papers Wiki



**7.** (i) உலகின் உற்பத்திக் கைத்தொழில்களின் அமைவிடத்தினைத் தீர்மானிக்கும் **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் உம்மால் குறிப்பிடப்பட்டவற்றுள் எவையேனும் **மூன்று** காரணிகளைத் தெரிவுசெய்து, உற்பத்திக் கைத்தொழில்களின் அமைவிடத்தினைத் தீர்மானிப்பதில் அந்த ஒவ்வொரு காரணியும் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை **இரண்டு** பண்புகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் எவையேனும் **மூன்று** கைத்தொழில்களைத் தெரிந்தெடுத்து, அக்கைத்தொழில் ஒவ்வொன்றினதும் அமைவிடத்தினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் **இரண்டு** காரணிகள் வீதம் ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் கைத்தொழில்களின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய **மூன்று** பிரதான பிரச்சினைகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

**8.** (i) ‘பூகோளமயமாக்கம்’ என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பூகோளமயமாக்கச் செயன்முறையைத் தூண்டுகின்ற ஊக்கிகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் பூகோளமயமாக்கத்தினால் ஏற்படும் **மூன்று** தாக்கங்களை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சமூக மற்றும் கலாசார மாற்றங்களின் மீது பூகோளமயமாக்கத்தினால் ஏற்பட்டுள்ள **மூன்று** தாக்கங்களை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library